THE EDUCATION CENTRE - AURORA
York Region District School Board
InspireLearning!
60 Wellington Street West, Aurora, Ontario L4G 3H2
**Tel:** 905.722.3201 905.895.7216 905.727.3141 416.969.8131
**Fax:** 905.727.1931
**Website:** www.yrdsb.ca

ஜனவரி 2019

அன்புக்குரிய குடும்பங்களே,

**குளிர்காலத்தில் கடுமையான வானிலையிற்கு தயாராகுதல்**

கடந்தசில வருடங்களில், குளிர்காலத்தின்போது மோசமான வானிலை நிகழ்வுகளின் அதிகரிப்பை நாம் அனுபவித்துள்ளோம். இதன் விளைவாக, அவ்வாறான கடுமையான வானிலை காணப்படும் நாட்களில் நாம் எவ்வாறு செயலாற்றலாம் என்பதை மீளாராய்வு செய்துள்ளோம். அரிதான சமயங்களில், எதிர்பாராவிதமான குளிர்கால வானிலை நிகழ்வுகள் இடம்பெறும்போது எல்லா பாடசாலைகளையும் மன்ற அமைவிடங்களையும் மூடவேண்டிய நிலைமை ஏற்படலாம்.

மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் நாள் முழுவதும் பாடசாலைக் கட்டிடத்தினுள் இருப்பது பாதுகாப்பற்றதென்று கருதப்படும்போது மூடுகைகள் கருத்திற்கொள்ளப்படும். பாடசாலைச் செயற்பாடுகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு மட்டுப்படுத்தும் நிகழ்வுகளான பாடசாலை அமைவிடத்திற்கு செல்வதைத் தடுக்கும், பரவலான அல்லது நீடித்த மின்சாரத் தடைகளை உருவாக்கும், அல்லது மின் இணைப்புகளை சேதப்படுத்தும் பனிப்பொழிவு அல்லது பனிப்புயல் இவற்றில் உள்ளடங்கலாம்.

தற்பொழுதுள்ள செயல்முறைகளுக்கிணங்க, இயலுமானவரை நாம் பாடசாலைகளை திறந்துவைக்க முயற்சிப்போம். இருந்தபோதிலும், பாடசாலைகள் மூடப்படவேண்டிய அரிய சந்தர்ப்பங்களில் வேறு குழந்தைப்பராமரிப்பு வசதிகளை நீங்கள் ஒழுங்குசெய்துகொள்வது முக்கியமாகும். பாடசாலைகள் மூடப்பட்டால் பாடசாலை வேளைகளுக்கு முன்னும் பின்பும் இயங்கும் திட்டங்கள் நடாத்தப்படமாட்டா. அவசரநிலை பாடசாலை மூடுகையொன்று நிகழ்ந்தால் அதற்கான திட்டமிடுதலைச் செய்துள்ளீர்கள் என்று தயவுசெய்து உறுதிசெய்துகொள்ளுங்கள்.

**பாடசாலைப் போக்குவரத்து இரத்துசெய்யப்படுதல்**

பேருந்துகள் மற்றும் டாக்ஸி சேவைகள் இயங்குவதற்கு சாலை நிலைமை பாதுகாப்பற்றதாகவோ அல்லது மாணவர்கள் வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படும் நேரத்தில் அவை குறிப்பிடத்தக்க அளவு மோசமடையும் என எதிர்ப்பார்க்கப்பட்டாலோ நாம் பாடசாலைப் போக்குவரத்துச் சேவைகளை இரத்துசெய்வோம். பேருந்துகள் இரத்துச்செய்யப்பட்டால் அது பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்று அர்த்தமளிக்காது. அவ்வாறு குறிப்பிடப்பட்டாலன்றி பாடசாலைகள் திறக்கப்பட்டிருக்கும்.

காலையில் போக்குவரத்து இரத்துச்செய்யப்பட்டால், அது பிற்பகலிலும் இரத்துச்செய்யப்படும். கடுமையான வானிலை காரணமாக பாடசாலைக்கு வருகைதராத மாணவர்கள் வருகைதரவில்லை என்று குறிப்பிடப்படமாட்டார்கள், ஆனால் உங்கள் பிள்ளை அத்தினம் பாடசாலைக்கு வரமாட்டார் என்று பாடசாலைக்கு அறிவிக்கும்படி நாம் குடும்பங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். கடுமையான வானிலை நாட்கள் (inclement weather days) பற்றிய மேலதிக தகவல்களுக்கு எமது இணையதளத்தைப் பார்வையிடுங்கள்: www.yrdsb.ca

**போக்குவரத்து மற்றும் பாடசாலை மூடுகைகள் பற்றிய தொடர்பாடல்**

பாடசாலைப் போக்குவரத்து மற்றும் பாடசாலை மூடுகைகள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் இயலுமான அளவு முன்னதாகவும் மு.ப. 6:00 இற்கு பிந்தாமலும் எடுக்கப்படும். போக்குவரத்து இரத்துசெய்யப்பட்டுள்ளதா அல்லது பாடசாலைகள் மூடப்பட்டுள்ளனவா என்று அறிந்துகொள்வதற்கு, தயவுசெய்து கீழ்வருவனவற்றைப் பாருங்கள்:

- Student Transportation Services இணையதளம்: www.schoolbuscity.com
- மாணவர் போக்குவரத்துத் தொலைபேசி இணைப்பு: 1-877-330-3001
- மன்ற இணையதளம் மற்றும் பாடசாலை இணையதளங்கள்
- @YRDSB Twitter கணக்கு
- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள்

பாடசாலை மற்றும் மன்ற அலுவலகங்களை மூடுவதைப்பற்றிச் சிந்திக்கும் வேளைகளில் நாம் குடும்பங்களுக்கு அதைக்குறித்து முன்கூட்டியே அறிவிக்க எத்தணிப்போம். எமது மாணவர்கள், அலுவலக அங்கத்தவர்கள் மற்றும் குடும்பங்களின் பாதுகாப்பே எமது முன்னுரிமையாக நாம் கருதுகின்றோம். உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் எழுந்தால், உங்கள் பாடசாலையின் அதிபருடன் தயவுசெய்து பேசுங்கள்.



Louise Sirisko
கல்வி அதிகாரி
York Region District School Board